**நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**முன்னிலை.திருமதி. ப.மகேஸ்வரி, எம்.எஸ்.ஸி,எம்.பில்., பி.எட்.,**

மூ.மு.எண்.10585/ஆ4/2024     நாள்.0511.2024.

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித் துறை - இளநிலை உதவியாளர் / தட்டச்சராக நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி -IVதேர்வு - தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு கலந்தாய்வு மூலம் நியமனம் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.56703/அ4/இ1/2023 நாள்.21.09.2023.
2. நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.08466/ஆ4/2023 நாள். 27.09.2023.
3. மோகனூர், வட்டாரக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.2078/அ1/2024 நாள்.28.10.2024.

------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பேரில் பார்வை 2இல் காணும் செயல்முறைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் கீழ்காணும் அட்டவணையில் உள்ள பணியாளருக்கு அவரது பெயருக்கு எதிரே கலம் 4ல் குறிப்பிட்ட நாள் முதல் மாண்பமை சென்னை / சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளையில் இந்நியமனம் சார்ந்து நிலைவையிலுள்ள தொகுதி IVஇன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்)2016, விதி எண்.28இன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திடல் வேண்டும். தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண்.172) தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், மேற்காண் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும் எனவும், குறிப்பிட்ட காலக்கெடுவான ஐந்தாண்டுகளுக்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனில் பணிநீக்கம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் திரு/திருமதி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | கொ.பிரபாவதி,<br>இளநிலை உதவியாளர்,<br>வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>மோகனூர்,<br>நாமக்கல் மாவட்டம். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

மேற்படி பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் செய்யுமாறும், அசல் ஆணைகள், அசல் பணிப்பதிவேடு மற்றும் கல்விச் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்புமாறும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: அசல் ஆணைகள், அசல் பணிப்பதிவேடு மற்றும் கல்விச் சான்றுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
நாமக்கல்.

பெறுநர்: சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்: வட்டாரக் கல்வி அலுவலர், மோகனூர், நாமக்கல் மாவட்டம்.